I. Jayanthy

உ



# யாழ். இந்து மகளிர் கல்லூரி

# பரிசளிப்பு விழா

## 17 - 09 - 1999

## அதிபர் அறிக்கை

பிரதம விருந்தினர்:

திரு. பொ. பாலசிங்கம்

ஆணையாளர், யாழ். மாநகரசபை

திருமதி அன்னலக்சுமிதேவி பாலசிங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ★ நிகழ்ச்சி நிரல் ★

| | | |
|---|---|---|
| 01. | இறை வணக்கம் | |
| 02. | வரவேற்புரை | செல்வி தே. வதனநிரஞ்சினி |
| 03. | அதிபர் அறிக்கை | திருமதி ச. ஜெயராசா |
| 04. | ஆங்கிலப் பேச்சு | செல்வி சி. காயத்திரி |
| 05. | தமிழ்ப் பேச்சு | செல்வி சு. தர்மிளா |
| 06. | பிரதம விருந்தினர் உரை | திருவாளர் பொன்னம்பலம் பாலசிங்கம்<br>ஆணையாளர், யாழ். மாநகரசபை. |
| 07. | பரிசில் வழங்கல் | திருமதி அன்னலக்சுமிதேவி பாலசிங்கம் |
| 08. | நன்றியுரை | செல்வி சி. ஷாமினி |
| 09. | கல்லூரிக் கீதம் | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிபர் அறிக்கை — 1999

அன்புக்கும் பெருமதிப்பிற்கும் உரிய பிரதம விருந்தினர்
யாழ். மாநகர சபை ஆணையாளர் உயர்திரு வேலுப்பிள்ளை பொன்னம்பலம் பாலசிங்கம் அவர்களே,
அன்பிற்குரிய திருமதி அன்னலச்சுமிதேவி பாலசிங்கம் அவர்களே,
உதவிக் கல்விப்பணிப்பாளர்களே,
ஏனைய கல்லூரி அதிபர்களே.
பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்களே,
பெற்றோர்களே,
பழைய மாணவர்களே,
நலன் விரும்பிகளே,
கல்லூரி ஆசிரியர்களே,
மாணவர்களே,

உங்கள் அனைவருக்கும் யாழ். இந்து மகளிர் கல்லூரி தனது அன்புகனிந்த வணக்கத்தைக் கூறி வரவேற்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றது.

இன்றைய பரிசளிப்பு விழாவிற்குப் பிரதம விருந்தினராக வருகை தந்து சிறப்பிக்கும் யாழ்ப்பாண மாநகரசபை ஆணையாளர் வே. பொ. பாலசிங்கம் அவர்களை வரவேற்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

அனலைதீவில் சைவம், கல்வி ஆகியவற்றிற்கு பெயர் பெற்ற குடும்பமொன்றில் பொன்னம்பலம் தம்பதிகளுக்கு மகனாகப் பிறந்த ஆணையாளர் பாலசிங்கம் அவர்கள், தனது ஆரம்பக் கல்வியை அனலைதீவு சதாசிவம் மகாவித்தியாலயத்திலும் பல்கலைக்கழக புகுமுகக் கல்வியை யாழ்ப்பாணம் வைத்தீஸ்வரா வித்தியாலயத்திலும் பல்கலைக்கழகக் கல்வியை கொழும்பு இலங்கைப் பல்கலைக்கழகத்திலும் பெற்றவர். மகரகம பட்டப்பின் முகாமைத்துவ நிறுவனத்தில் பயின்று உள்ளூராட்சி நிர்வாகத்தில் பட்டப்பின் டிப்ளோமா தகைமையைப் பெற்றவர்.

இலங்கை நிர்வாக சேவைப் போட்டிப் பரீட்சையில் சித்திபெற்று நிர்வாகத்தில் காலடி வைத்தார்.

உள்ளூராட்சி நிர்வாக சேவையில் திறம்பட பணியாற்றி வரும் இவர், 1979 — 1981 ஆண்டுகளில் சுன்னாகம் நகர சபையில் விசேட ஆணையாளராகவும், செயலாளராகவும் பணியாற்றினார். 1981 — 1988 காலத்தில் யாழ்ப்பாணம் மாவட்ட அபிவிருத்திச் சபையின் பிரதிச் செயலாளராகப் பணிபுரிந்தார். 1988 — 1989 காலகட்டத்தில் காங்கேசன் துறைப் பிரதேச சபையில் செயலாளராகவும் விசேட ஆணையாளராகவும் பணியாற்றினார். 1989 தொடக்கம் இன்று வரை யாழ். மாநகரசபை ஆணையாளராகப் பணிபுரிந்து வருகின்றார். புதுடில்லியில் மனிதக் குடியிருப்புக்கள் தொடர்பான செயலமர்வில் கலந்து கொண்டார்.

கடமையுணர்வும், பாரபட்சமற்ற தன்மையும், நிர்வாகத்திறமையும், அன்பினால் எவரையும் அரவணைத்துச் செல்லும் தன்மையும் இவரிடம் காணப்படுகின்ற சிறப்பம்சங்களாகும். யாழ்ப்பாணம் யுத்தத்தின் பிடியில் சிக்கியிருந்த போதெல்லாம் இவர் மூலம் ஆற்றப்பட்ட சமூக சேவைகள் நாம் அனைவரும் கண்கூடாகக் கண்டு வியந்தவையே. இடம் பெயர்ந்த மக்களுக்கு உணவு, குடிநீர், சுகாதார வசதி போன்றவற்றை முறைப்படி திட்டமிட்டுச் செய்தவர். யாழ். மாநகருக்குட்பட்ட பகுதியின் வளர்ச்சிக்கும் வளத்திற்கும் அரும்பாடு பட்டவர். யாழ்ப்பாணத்தில் அழிந்துபோன நூல் நிலையத்தைப் புதுப்பிக்க வேண்டுமென்ற ஆர்வத்தால் செயலாற்றியவர். அதன் செயற்பாடாக தற்காலிக பொது நூலகத்தை யாழ்ப்பாணத்தில் அமைத்து வெற்றி கண்டவர்.

பிரித்தானிய இளவரசர் சாள்ஸ் அவர்கள் இலங்கையின் சுதந்திரப் பொன் விழாவை முன்னிட்டு கொழும்பிற்கு வருகைதந்த பொழுது யாழ்ப்பாணத்தில் இருந்து சென்ற குழுவில் அங்கம் வகித்து, யாழ்ப்பாணம் மணிக்கூட்டுக் கோபுரத்தைத் திருத்தியமைப்பதற்கான பொறித் தகட்டையும் பணத்தையும் இளவரசரிடம் இருந்து பெற்றுவந்தார். சென்ற ஆண்டு சிதைவுற்ற மாநகராட்சி மன்றக் கட்டிடத்தை திருத்தியமைத்தார். யாழ்ப்பாணத்தில் எவரும் குறைசொல்லிக் கேட்காத நிர்வாகி இவர் என்றால் மிகையாகாது. நிறைந்த இறைபக்தியுடைய இவர் ஒரு சாயி பக்தராவார்.

அரிமாக்கழகத்தில் அங்கம் வகிக்கும் இவர் அதன்மூலமும் தனது சமூகப் பணியை ஆற்றுவதில் பின்னிற்கவில்லை. காலத்திற்குக் காலம் எங்கள் கல்லூரியின் சுற்றாடலையும், குடிநீரையும் சுத்தம் செய்து தந்து உதவியுள்ளார். இத்தகைய ஆற்றல்மிக்கவரை, இக்கல்லூரியை நன்கு நேசிப்பவரை, எங்கள் கல்லூரியின் பரிசளிப்பு விழாவிற்குப் பிரதம விருந்தினராக அழைத்து அவரது அரிய கருத்துக்களை மாணவர்களுக்கு வழங்கக் கிடைத்த சந்தர்ப்பத்தையிட்டுப் பெருமகிழ்ச்சியடைகிறோம்.

இவரது வாழ்க்கைத்துணைவியார் திருமதி அன்னலச்சுமிதேவி பாலசிங்கம் அவர்கள் திருகோணமலையில் அமரசிங்கம் தம்பதிகளுக்கு மகளாகப் பிறந்தவர். திருகோணமலை சண்முக வித்தியாலயத்தில் தனது கல்வியைக் கற்ற இவர் தனது கணவரின் உயர்வில் முதுகெலும்பாக விளங்குபவர். சாந்தமும் அமைதியும் கொண்ட இவர் தனது கணவரின் செயற்பாடுகளுக்குப் பக்க பலமாக நல்ல ஆலோசகராக விளங்கி வருகிறார். எமது அழைப்பை ஏற்றுப் பல சிரமங்களின் மத்தியிலும் எம் மாணவர்களுக்குப் பரிசில்களை வழங்குவதற்கு வருகை தந்திருக்கும் அவரையும் வருக வருக என வரவேற்பதில் மகிழ்ச்சியடைகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தத் தமிழ் இந்துத் தம்பதியினரை முதன்மை விருந்தினராகக் கொண்டும் இக்கல்லூரியின் நிறுவனரை நினைவிற் கொண்டும் 1998 ஆம் ஆண்டிற்கான அதிபரின் அறிக்கையை உங்கள் முன் சமர்ப்பிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

## மாணவர் தொகை

| | |
|---|---|
| ஆண்டு 6 — 11 | 1047 |
| ஆண்டு 12 — 13 | 575 |
| மொத்தம் | 1622 |

## ஆசிரியர் தொகை

தற்பொழுது எமது கல்லூரியில் கல்வி பயிற்றுவிக்கும் ஆசிரியர் தொகை 64. இவர்களுள் செல்வி யோகேஸ்வரி கந்தையா அவர்கள் பிரதி அதிபராகப் பணி புரிகின்றார். திருமதி பு. சோதிலிங்கம், திருமதி கா. சிவநேசன், திருமதி இ. பாலசிங்கம், திருமதி த. சிவலிங்கம், திருமதி மீ. செல்லையா ஆகியோர் பகுதித் தலைவர்களாகக் கடமை புரிகின்றனர். திருமதி ச. நரேந்திரன், திருமதி த. ச. யோகீஸ்வரன் ஆகியோர் உயர்தரப்பிரிவினைப் பார்த்து வருகின்றனர்.

## இடம் பெயர்ந்து சென்றவர்களுள் மீண்டும் வருகைதந்தோர் :-

திருமதி வே. பேரின்பநாதன், செல்வி கே. தில்லைநடராஜா, செல்வி நா. வெற்றிவேலு ஆகியோர் இவ்வாண்டு மீண்டும் திரும்பி வந்து பாடசாலையில் கடமையேற்றனர்.

## புதிதாகச் சேர்ந்த ஆசிரியர் :-

செல்வி இ. லலிதா விஞ்ஞானப் பயிற்றப்பட்ட ஆசிரியையாகவும், செல்வி சு. பூபாலசிங்கம், செல்வி ம. சுப்பிரமணியம் ஆகியோர் தகுதி காண் கணித ஆசிரியைகளாகவும், திருமதி சி. ஞான சுப்பிரமணியம் வர்த்தகப் பட்டதாரி ஆசிரியையாகவும், திருமதி கௌ. சிவகுமார் கலைப்பட்டதாரி ஆசிரியையாகவும் திருமதி பு. தர்மகுலசிங்கம் விஞ்ஞானப் பட்டதாரி ஆசிரியையாகவும், திருமதி கோ. நகுலேஸ்வரன், திரு. க. சிவத்திரன் திருமதி க. சிவயோகன் ஆகியோர் விஞ்ஞானப் பட்டதாரிப் பயிலுனர் ஆசிரியராகவும் திருமதி. ந. பரமேஸ்வரன் கலைப் பட்டதாரிப் பயிலுனர் ஆசிரியையாகவும் திருமதி சு. பழனிமலைநாதன் பயிற்றப் பட்ட கணித ஆசிரியையாகவும் எமது ஆசிரியர்குழாத்துடன் இணைந்துள்ளனர். இவர்கள் சிறப்பாகப் பணியாற்ற வேண்டுமென வேண்டுவதுடன் இவர்களை வரவேற்பதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

## தற்காலிகமாகக் கடமையாற்றி நிரந்தர நியமனம் பெற்றவர்கள் :-

எங்கள் கல்லூரியில் தற்காலிக ஆசிரியைகளாகக் கடமையாற்றிய விஞ்ஞானப் பட்டதாரி செல்வி ந. சிவனேஸ்வரி, விஞ்ஞானப் பயிற்றப்பட்ட ஆசிரியைகளான திருமதி நே. விக்னேஸ்வரன், செல்வி க. நமசிவாயம் ஆகியோர் நிரந்தர ஆசிரியைகளாகக் கடமையேற்றனர்.

## இடம் மாற்றம் பெற்றோர் :-

கணித ஆசிரியை திருமதி ஞா. ஸ்ரீகாந்தா கண்டிக்கும் விஞ்ஞான ஆசிரியை திருமதி ல. க. ஸ்ரீவேல்நாதன், மனையியல் ஆசிரியை திருமதி நி. நவரட்ணராஜா, வர்த்தக ஆசிரியை திருமதி கி. நவரட்ணசிங்கம், ஆங்கில ஆசிரியை திருமதி வ. சண்முகநாதன் ஆகியோர் கொழும்புக்கும் இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளனர். அவர்களுக்கு நன்றியைத் தெரிவிப்பதுடன் செல்லுமிடத்தில் அவர்கள் பணி சிறக்க வாழ்த்துகிறோம்.

## ஆசிரியர் வாண்மை விருத்தி :-

திருமதி கோ. நகுலராசா ஆசிரியை பலாலி ஆசிரிய கலாசாலையில் வரவு விரிவுரையாளராகக் கடமையேற்றுள்ளார். திருமதி ச. நாகராசா அவர்கள் கல்வி நிர்வாக சேவைப் பரீட்சையில் சித்தியடைந்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துள்ளார். கல்லூரி அதிபர் திருமதி ச. ஜெயராசா அவர்கள் ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன் அதிபர்களுக்கான பயிற்சியினை புதுடில்லியில் பெற்றுத் திரும்பினார்.

## பரீட்சைப் பெறுபேறுகள்:-

க. பொ. த. உயர்தரம் ஆகஸ்ட் 1998 பல்கலைக்கழகம் செல்லத் தகுதிபெற்றோர்:

| | | |
|---|---|---|
| உயிரியல் விஞ்ஞானம் | : | 18 |
| பௌதிக விஞ்ஞானம் | : | 03 |
| வர்த்தகம் | : | 34 |
| கலை | : | 96 |
| | | 152 |

க. பொ. த. (சா/த) டிசம்பர் 1998
க. பொ. த. உயர்தரம் கற்கத் தகுதி பெற்றோர்:-128

சித்தியடைந்தோர்:-134

பரீட்சைக்குத் தோற்றியோரின் 72. 4%

## விளையாட்டுத்துறை:-

விளையாட்டுத்துறைக்கு நிரந்தர ஆசிரியர் இல்லாத போதும் திருமதி. இ. குணரட்ணம், திருமதி. றோ. பாலஸ்கந்தன் ஆகியோர் பொறுப்பேற்றுப் பணியாற்றி வருகின்றனர்.

## வலைப்பந்தாட்டம் :-

கோட்டமட்டப் போட்டியில் 17 வயதுப்பிரிவினரும்

19 வயதுப் பிரிவினரும் முதலிடம் பெற்றனர்.

17 வயதுப் பிரிவினர் வலய மட்டத்தில் 2ம் இடத்தையும்.

மாவட்ட மட்டத்தில் 3ம் இடத்தையும் பெற்றனர்.

## கூடைப்பந்தாட்டம்:-

கூடைப் பந்தாட்டத்தில் பல்கலைக் கழக மாணவர்களுடன் போட்டியிட்டனர்.

## பட்மின்ரன்:-

வலயமட்டப் போட்டியில் 17 வயதுக் குட்பட்ட பிரிவில் இரட்டையர் ஆட்டத்தில் ராஜினி, பழனித்துரை, சத்தியவாணி திருஞானம் ஆகியோர் இரண்டாம் இடத்தைப் பெற்றனர்.

## தாச்சிப்போட்டி:

15 வயதுக்குட்பட்ட பிரிவில் வலய மட்டத்தில் 1ம் இடத்தைப் பெற்றனர்.

## உடற்பயிற்சி:-

கோட்டமட்டத்தில் 15 வயதுக்குட்பட்ட பிரிவினரும் 19 வயதுக்குட்பட்ட பிரிவினரும் 1ம் இடத்தைப் பெற்றனர். வலயமட்டத்தில் 19 வயதுக்குட்பட்ட பிரிவினர் 2ம் இடத்தைப் பெற்றனர்.

## மெய்வல்லுனர் நிகழ்ச்சி:

பொறுப்பாசிரியர்:- திருமதி. இ. குணரட்ணம்

பயிற்றுனர் :- திருமதி. றோ. பாலஸ்கந்தன்

அணித்தலைவி:- செல்வி. வித்தியா குணநாயகம்

வருடாந்த இல்ல மெய்வல்லுனர் போட்டியில் பார்வதி இல்லம் முதலாம் இடத்தைப்பெற்றுக்கொண்டது. வண்ணை வடக்குக் கொத்தணிப் பாடசாலைகளில் ஒன்றான யாழ். இந்து ஆரம்ப பாடசாலையின் ஓய்வு பெற்ற அதிபர் திரு. க. தவராசா அவர்கள் பிரதம விருந்தினராகவும், இந்துக் கல்லூரியின் அதிபர் திரு. அ. சிறிக்குமரன் சிறப்பு விருந்தினராகவும் வருகைதந்து சிறப்பித்தனர். திருமதி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவராசா அவர்கள் மாணவர்களுக்குச் சான்றிதழ்களையும், பரிசில்களையும் வழங்கினார்.

கோட்டமட்டம், மாவட்ட மட்டம் ஆகியவற்றில் மெய்வல்லுனர் போட்டிகளில் பங்குபற்றி வெற்றி பெற்று மாகாண மட்டத்தில் போட்டியிடவும் தெரிவு செய்யப்பட்டனர்.

**மேலைத்தேய வாத்தியக்குழு:**

கிடைக்கப்பெற்ற ஒரு தொகுதி இசைக் கருவிகளுடன் வாத்தியக் குழு இயங்கி வந்துள்ளது.

**சதுரங்கக்கழகம்:**

இக் கழகத்தின் பொறுப்பாசிரியராகத் திருமதி. தி. சோதிலிங்கம் விளங்கினார். இக்கழகத்தில் மாணவியர் பயிற்சி பெறுகின்றனர்.

பாடசாலை அணிகளுக்கிடையிலான சுற்றுப்போட்டிகளில் பங்குபற்றியது.

**மாணவர் முதல்வர் சபை:**

அதிபரின் தலைமையின் கீழ் இயங்கும் இச் சபைக்குப் பிரதி அதிபர் செல்வி. யோ. கந்தையா அவர்கள் பொறுப்பாக வுள்ளார். திருமதி. பு. சோதிலிங்கம், திருமதி. கா. சிவநேசன் திருமதி. இ. பாலசிங்கம், திருமதி. க. சிவலிங்கம், திருமதி. மீ. செல்லையா, திருமதி. ச. நரேந்திரன், திருமதி. த. ச. யோகீஸ்வரன் ஆகியோர் இச் சபையில் அங்கம் வகிக்கின்றனர்.

**முதுநிலை மாணவ முதல்வி:**

செல்வி. பிரதீபனா சிவானந்தன்

**உதவி முதுநிலை மாணவ முதல்வி:**

செல்வி. சி. கார்த்திகா

**விளையாட்டுத்துறை மாணவ முதல்வி:**

செல்வி. வித்தியா குணநாயகம்

**உதவி விளையாட்டுத்துறை மாணவ முதல்வி:**

செல்வி. சௌமியா சிவகுமார்

**உறுப்பினர் தொகை:- 50**

இவர்கள் கல்லூரியின் ஒழுங்கு விதிகளுக்கமைய, ஒழுங்கையும் பாரம்பரியத்தையும் பேணி வருகின்றனர். என்னுடன் இணைந்து செயற்படும் ஒழுக்காற்றுச் சபை இவர்களுக்கு ஆலோசனை வழங்கி வழிகாட்டி வருகின்றது. பாடசாலை நிகழ்வுகளில் தமது கடமைகளைச் செவ்வனே செய்து வருகின்றனர்.

**ஆசிரியர் கழகம்:-**

தலைவர்:

திருமதி. ஞா. வீரகத்திப்பிள்ளை

செயலாளர்:

திருமதி. கா. சிவநேசன்

பொருளாளர்:

திருமதி. ஞா. கணேசநாதன்

ஆசிரியரின் நலனைக் கருத்திற் கொண்டு இச்சபை கருமமாற்றி வருகின்றது. கல்லூரியின் வளர்ச்சிக்காக ஒத்துழைத்துப் பணியாற்றுகிறது. ஓய்வு பெறும், இடமாற்றம்பெறும் ஆசிரியர்களைத் தக்க முறையில் கௌரவித்து வருகிறது. சட்டநாதர் கோவில் திருவிழா ஒன்றையும் செய்து வருகின்றது. சக ஆசிரியர்களின் நன்மை தீமைகளில் பங்குபற்றித் தனது பங்களிப்பைச் சிறந்த முறையில் செய்து வருகின்றது.

**இந்துமா மன்றம்:-**

வருடம் தோறும் வெவ்வேறு ஆசிரியர்களைக் காப்பாளராகக் கொண்டு இயங்கும் இம்மன்றமானது இவ்வாண்டில் செல்வி. இ. இராமசாமி அவர்களைக் காப்பாளராகக் கொண்டியங்கியது. சமய சம்பந்தமான நிகழ்ச்சிகள் எல்லாவற்றை

யும் இம்மன்றம் பொறுப்பேற்று நடாத்தி வருகின்றது. மாணவர்களிடையே சமயப் பற்றை வளர்க்கும் நோக்குடன் பல நிகழ்வுகளை நடாத்தி வருகின்றது. நவ ராத்திரி விழா, சிவராத்திரி விழா, நால்வர் குருபூசை போன்ற நிகழ்ச்சிகளைச் சிறப்பாக நடாத்தியது. சைவசமயப் பரீட்சையிலும், சமய அறிவுப் போட்டிகளிலும் மாணவர்களைத் தோற்றச் செய்கிறது. கல்லூரி வளாகத்திலுள்ள பிள்ளையார் ஆலயத்தில் பூசைகளைச் செய்து வருகின்றது. ஆலயத்தில் மகா கும்பாபிஷேக நிகழ்வும் இடம் பெற்றது. கோவிலைச் சுற்றிப் பாதுகாப்புக் கம்பி போடப்பட்டது. திருமதி. கா. சிவநேசன், திருமதி. ப. வாகீஸ்வரி அம்மா, திருமதி. த. சிவலிங்கம், திருமதி. ம. திருநாவுக்கரசு, திருமதி. ச. சிவநாதன், திருமதி, ச. சிவகுமார், திருமதி. ஞா. கணேசநாசன் ஆகியோர் இணைந்து செயற்படுகின்றனர்.

## உயர்தர வகுப்பு மாணவர் மன்றம் :-

இவ்வாண்டு இம்மன்றமானது திருமதி. ச. நரேந்திரன் அவர்களைக் காப்பாளராகக் கொண்டு இயங்கியது. இதன் தலைவராக செல்வி கார்த்திகா வடிவானந்தனும், செயலாளராக ரி. ஹேமலதாவும், பொருளாளராக பி. நளாயினியும் பணியாற்றினர். உயர்தர மாணவர் மன்றக் கூட்டங்களை முறையாக நடாத்தி அதில் வினாடிவினா போட்டி, பொது அறிவுப் போட்டிகள், பட்டிமன்றம் போன்ற நிகழ்ச்சிகளை நடாத்தி மாணவர்களின்திறனை வளர்த்தது. வருடாந்த ஒன்று கூடல் நிகழ்வுக்கு யாழ் பல்கலைக் கழகக் கலைப்பீடாதிபதி பேராசிரியர் அ. சண்முகதாஸ் அவர்களையும், அவர் தம் துணைவியார் கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் அவர்களையும் பிரதம விருந்தினராக அழைத்துச் சிறப்பாக வைபவத்தை நடாத்தினர்.

## தமிழ் மன்றம் :-

செல்வி. மாலதி ஆறுமுகத்தைக் காப்பாளராகக் கொண்டு இம்மன்றம், கோட்ட மட்ட, மாவட்ட மட்டப் போட்டிகளில் மாணவியர் பங்கு பற்றி வெற்றியீட்டச் செய்துள்ளது. மாகாண மட்டத்தில் பிரிவு 5 சிறுகதை ஆக்கத்தில் செல்வி. பாமா பாலச்சந்திரன் 2ம் இடத்தைப் பெற்றுள்ளார். பிரிவு 2 பாவோதல் நிகழ்ச்சியில் செல்வி ஸ்ரீதாரணி பாலச்சந்திரன் வலய மட்டத்தில் 1 ம் இடத்தைப் பெற்று மாகாண மட்டப் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டார். இம்மன்றத்தில் திருமதி. சு. கனகசிங்கம், திருமதி. ப. தம்பித்துரை, திருமதி. க. சிவநேசன், திருமதி. ச சோசை, செல்வி. மு. கலைவாணி, திருமதி. ஆ. செங்கதிர்ச்செல்வன் ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர். வருடம் தோறும் நடைபெறும் தமிழ்த்தின விழாவையும் நடாத்தி வெற்றி பெற்ற மாணவர்களுக்கான சான்றிதழ்களையும் வழங்கியது. இவ்விழாவுக்கு யாழ் பல்கலைக் கழகப் பதிவாளர் கலாநிதி க. குணராசாவும் அவரது பாரியாரும் பிரதம விருந்தினர்களாக வந்து சிறப்பித்தனர்.

## விஞ்ஞான மன்றம்:

உயர்தர விஞ்ஞான மன்றம் திருமதி. த. தேவராஜன் அவர்களைப் பொறுப்பாளராகக் கொண்டு இயங்கியது. கனிஷ்ட மன்றம் திருமதி. பி. கலைநாதன் அவர்களைக் காப்பாளராகக் கொண்டது. இம் மன்றத்தின் தலைவராக செல்வி. நந்தகி ஸ்ரீகுமரன் விளங்கினார். மாணவர்களின் விஞ்ஞான அறிவையும், மனப்பாங்கையும் வளர்க்கும் பொருட்டு பல செயற்பாடுகளை மேற்கொண்டது. பாடசாலை மட்டத்திலான விஞ்ஞானக் கண்காட்சி, விஞ்ஞான தினவிழா என்பன நடாத்தப்பட்டன. மாணவர்கட்கான தாவரவியல் பூங்காவை ஆரம்பிப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. பிற கல்லூரிகளில் நடைபெற்ற விஞ்ஞானக்

கண்காட்சிகளுக்கு மாணவியரை அழைத்துச் சென்றனர். யாழ்பல்கலைக்கழக விரிவுரையாளர்களான திரு. எம். சுரேந்திரன், திரு. எஸ் அரவிந்தன் ஆகியோரால் கருத்தரங்குகள் நடாத்தப்பட்டு மாணவர்கள் பயனடைந்தனர். திருமதி. ச. நரேந்திரன் செல்வி. நி. சோமசுந்தரம், திருமதி. கோ. நகுலேஸ்வரன், திரு. க. சிவத்திரன் திருமதி. க. சிவயோகன், திருமதி றோ பாலஸ்கந்தன், திருமதி. பு. சோதிலிங்கம் திருமதி. இ. பாலசிங்கம். திருமதி. தே. விக்னேஸ்வரன், செல்வி. க. நமசிவாயம், திருமதி. த. மகேந்திரராஜா, செல்வி. இ. லலிதா, செல்வி. தி.கேதீஸ்வரி, ஆகியோர் இணைந்து செயற்படுகின்றனர்.

## கணித மன்றம்:

திருமதி. ய. சண்முகரட்ணத்தைக் காப்பாளராகக் கொண்டு இம்மன்றம் இயங்குகின்றது. மாணவர்கள் கணிதத்தில் நல்ல அறிவைப்பெற வேண்டுமென்னும் நோக்கத்துடன் விசேட வகுப்புக்களை நடாத்தியது. கணகாட்சியையும் பாடசாலை மட்டத்தில் வைத்துப் பொருள்களைக் காட்சிப்படுத்தியது. திருமதி. வே. பேரின்பநாதன், செல்வி. சி நல்லதம்பி, திருமதி. ச. நாகராசா, திருமதி. ம. சிவரட்ணம் செல்வி. சு. பூபாலசிங்கம், செல்வி. ம. சுப்பிரமணியம் ஆகியோர் இனைந்து செயற்பட்டனர்.

## விவசாயக் கழகம்

திருமதி. மீ. செல்லையா அவர்களைப் பொறுப்பாசிரியராகக் கொண்டு இக்கழகம் இயங்குகின்றது. விவசாய மாணவர்களிடையே செயல்முறைக் கல்வியைச் சிறந்த முறையில் புகட்டிவருகின்றது. பாடசாலை மட்டத்தில் விவசாய அறிவுப் போட்டியை நடாத்துதல், பரிசில் வழங்கி ஊக்குவித்தல் ஆகிய பணிகளைச் செய்து வருகின்றது.

## வர்த்தக மாணவர் ஒன்றியம்

திருமதி. அருள்வேல் அவர்களைக் காப்பாளராகக் கொண்ட இம்மன்றம் வணிக மாணவர்களின் கல்வியை வளர்ப்பதில் பெரிதும் அக்கறையுடன் உழைத்து வருகின்றது. இம்மன்றத்தின் தலைவியாக செல்வி. த. தயாளினி கடமைபுரிந்தார். இம்மன்றம் கல்விக் கருத்தரங்குகளையும் நடாத்திவருகின்றது. வருடாந்தம் வெளியிடப்படும் வணிக வனிதை நூலும் வெளியிடப்பட்டது. வெளியீட்டிற்குப் பிரதம விருந்தினராக மக்கள்வங்கி, யாழ். பல்கலைக்கழகக் கிளையின் முகாமையாளர் திருமதி. பத்மலோஜினி ரகு அவர்கள் வருகை தந்திருந்தார்கள். பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் உதவியுடன் பல சிறப்பு விரிவுரைகள் நடாத்தப்பட்டன.

திருமதி. த. ச. யோகீஸ்வரன் செல்வி ந. யோகேஸ்வரி, திருமதி. ஆ. செங்கதிர்ச் செல்வன் திருமதி. சி. ஞானசுப்பிரமணியம், திருமதி அ. சிவபாதசுந்தரம், ஆகியோர் இதில் இணைந்து செயற்படுகின்றனர்.

## புவியியல் மன்றம்:

செல்வி ப. சிவசித்திராவை காப்பாளராகக் கொண்டு இம்மன்றம் நல்ல முறையில் இயங்கி வருகின்றது. மாதமொரு முறை நடைபெறும் கூட்ட நிகழ்ச்சிகளில் மாணவரின் அறிவை வளர்க்கும் வகையில் பொது அறிவுப் போட்டிகள், சிறப்புச் சொற்பொழிவுகள் என்பன நிகழ்த்தப்பட்டன. பல்கலைக்கழகத்தில் நடைபெறும் விசேட புவியியற் கருத்தரங்குகளுக்கு மாணவர்களை அழைத்துச் சென்று பயன் பெற்றுள்ளது. இதன் செயற்பாடுகளில் திருமதி. அ. ஸ்ரீஸ்கந்தராசா ஆசிரியையும் இணைந்து செயற்படுகின்றார்.

## ஆங்கில மன்றம்:

திருமதி ஜெ. சுஜிதன் அவர்களைக் காப்பாளராகக் கொண்ட இம்மன்றம் ஆங்கிலக் கல்வியின் வளர்ச்சியில் அக்கறைகாட்டிவருகின்றது. ஆங்கில தினத்தையும் நடாத்தி கோட்டமட்ட, வலயமட்டப் போட்டிகளிலும் மாணவர்களைப் பங்குபற்றச் செய்கின்றது. மாவட்டமட்டத்தில் நாட

கத்தில் இரண்டாம் இடத்தைப் பெற்றது. ஆங்கிலதின விழாவுக்கு யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு. எஸ். சுந்தரேசன் அவர்கள் பிரதம விருந்தினராக வருகை தந்து சிறப்பித்தார். திருமதி ஞா. வீரகத்திப்பிள்ளை, திருமதி இ. குணரட்ணம், திருமதி வ. சண்முகநாதன், திருமதி யோ. சுந்தரநேசன், திருமதி த. மகேந்திரராஜா ஆகியோர் இதில் அங்கம் வகிக்கின்றனர். இவர்கள் பணி மேலும் வளர வேண்டுமென வாழ்த்துகிறோம்.

## நுண்கலை மன்றம்:-

திருமதி ம. திருநாவுக்கரசு அவர்களைக் காப்பாளராகக் கொண்டு இம்மன்றம் தனது பணியைத் திறம்படச் செய்து வருகின்றது. இம்மன்றத்தில் திருமதி ச. சிவகுமார், திருமதி ஞா. கணேசநாதன், திருமதி பா. சிவபாதசேகரம், செல்வி. ப. இராஜஸ்ரீ ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர். இசை, நடனம், சித்திரம் ஆகிய துறைகளில் சிறந்த முறையில் பயிற்சியளித்துப் போட்டிகளில் பங்குபற்றச் செய்து வெற்றி பெற்றுக் கல்லூரிக்கும் பெருமை தேடிக்கொடுக்கின்றார்கள். இசை, நடனம் ஆகியவற்றில் கோட்ட மட்டத்தில் முதலாம் இடத்தையும் வலய மட்டத்தில் நடனத்தில் இரண்டாம் இடத்தையும் பெற்றனர். சர்வதேச சிறுவர் தினச்சித்திரப் போட்டியில் மேற்பிரிவில் சாருபா சரவணபவான் கோட்ட மட்டத்தில் மூன்றாம் இடத்தையும் கிருபாவினி பாக்கியநாதன் மூன்றாம் இடத்தையும் பெற்றனர். ஹற்றன் நஷனல் வங்கியினால் நடாத்தப்பட்ட சமாதான சுவரொட்டிப் போட்டியில் இக்கல்லூரி மாணவிகளான ச. சாருபா, ச. சதுனா, நா. ராஜினி ஆகியோரின் ஆக்கங்கள் தெரிவு செய்யப்பட்டன. வியோ கழகத்தினால் நடாத்தப்பட்ட சித்திரப்போட்டியில் சாருபாவின் ஆக்கம் தெரிவுசெய்யப்பட்டது. இவர்களின் பணி சிறப்புற வாழ்த்துகிறேன்.

## சமூகக்கல்வி மன்றம்:-

திருமதி. ப. சுந்தரலிங்கம் அவர்களைக் காப்பாளராகக் கொண்ட இம்மன்றம் சொற்பொழிவுகள், பொதறிவு, வினாவிடைப் போட்டிகளைப் பாடசாலை மட்டத்தில் நடாத்தியதுடன், கண்காட்சிகளையும் நடாத்தியது. மாணவர்களை வெளியில் அழைத்துச் சென்றும் அவர்களது அறிவை வளர்த்து வருகிறது. திருமதி க. பூலோகசிங்கம் திருமதி ந. இராகவன், திருமதி ந. பரமேஸ்வரன் திருமதி அ. ஸ்ரீஸ்கந்தராசா, திருமதி. ச. சோசை ஆகியோர் இதில் இணைந்து செயற்படுகின்றனர்.

## சாரணியர் குழு:-

இக் குழுவுக்குப் பொறுப்பாசிரியையாக திருமதி. த. ச. யோகீஸ்வரனும், உதவியாளராக திருமதி. றோ. பாலஸ்கந்தன், செல்வி. இ. லலிதா இரத்தினம் ஆகியோரும் விளங்குகின்றனர். 36 சாரணியர் இக் குழுவில் அங்கம் வகிக்கின்றனர். கல்லூரியின் உள்ளும் புறமும் நடைபெறும் நிகழ்வுகளில் பங்கு பற்றித் தம்மாலான சேவைகளைச் செய்து வருகின்றனர்.

## சென்ஜோன்ஸ் முதலுதவிப்படை:-

இப்படையானது கல்லூரியிலும் சமூகத்திலும் பல சேவைகளையாற்றி வருகின்றது. திருமதி. றோ. பாலஸ்கந்தன் இதன் காப்பாளராக இருந்து சேவையாற்றுகின்றார். அங்கத்தவர்களுக்குப் பல கருத்தரங்குகளை நடாத்துகின்றது. நல்லூர் உற்சவத்தின் போது உதவி புரிந்து வருகின்றது.

## சமாதான நட்புறவுக் கழகம்:-

இக் கழகத்தில் திருமதி. கோ. நகுலராஜா, திருமதி. ஞா. வீரகத்திப்பிள்ளை ஆகியோர் பொறுப்புடன் செயற்படுகின்றனர். சமாதானத்துக்கான செயற்பாடுகளில் பெரிதும் அக்கறைகாட்டி வருவதுடன் அதற்கான கருத்தரங்குகளிலும் பங்கு பற்றியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்லூரிக் கூட்டுறவுச் சங்கம்:-

இச் சங்கத்தின் பொருளாளராக திருமதி. தி. சோதிலிங்கம் விளங்குகின்றார். மாணவர்களுக்குத் தேவையான கொப்பிகள், பைகள், பேனா, காலுறை போன்றவற்றையும் சிற்றுண்டி வகைகளையும் நியாய விலையில் கொடுத்து உதவி புரிகின்றது. கல்லூரியின் பரிசளிப்பு விழாவுக்கும் நிதியுதவி வழங்கியது. திருமதி. கி. நவரட்ணசிங்கமும் இணைந்து செயற்பட்டார்.

## இன்ராறக்ட் கழகம்:-

இக்கழகம் திருமதி. கலைவாணி விமலநாதன் அவர்களைப் பொறுப்பாசிரியராகவும், திருமதி ஆ. செங்கதிர்ச்செல்வனைத் துணையாசிரியையாகவும் கொண்டு செயற்படுகிறது. செல்வி. த. ரேவதி அதன் தலைவியாக விளங்கினார். வருட நடுப்பகுதியில் பழைய புதிய உறுப்பினர்களுக்கு சின்னம் சூட்டப்பட்டது. கல்லூரியிலுள்ள வறிய மாணவர்களுக்கு இலவசமாகக் காலணிகளை வழங்கியது. முத்துத்தம்பி சிறுவர் நிலையத்துக்கு ரூபா 5000/- பெறுமதியான அப்பியாசக் கொப்பிகளையும் சிற்றுண்டிகளையும் வழங்கியது. இது போன்ற பல சேவைகளைக் கல்லூரிக்கும் சமூகத்துக்கும் ஆற்றி வருகின்றது.

## லியோ கழகம்:-

செல்வி. யோகேஸ்வரி நடராசாவின் வழி நடத்தலில் இக் கழகம் பல சேவைகளை ஆற்றி வருகிறது. செல்வி மாலதி ஆறுமுகம் அவருடன் இணைந்து செயற்படுகின்றார். செல்வி. பிரதீபனா சிவானந்தம் அதன் தலைவியாக விளங்கினார். லயன்ஸ் கழகத்தின் செயற்பாடுகளுக்குத் தம்மாலான உதவியைச் செய்துள்ளார்கள். வெள்ளைப் பிரம்புத் தினத்தின் போது மூவருக்கு வெள்ளைப் பிரம்பு வழங்கியுள்ளனர். வதிரியிலுள்ள ஸ்ரீபரமானந்த ஆச்சிரமத்துக்கு எமது கல்லூரி லியோ கழகம் சார்பாக 15 பேர் சென்று மூவாயிரம் ரூபா வழங்கினர். தர்மவாரத்தை முன்னிட்டு 1000 ரூபா பெறுமதியான அப்பியாசக் கொப்பிகளை மாணவர்களுக்கு வழங்கினர். இவர்களது சேவை மேலும் வளரவேண்டுமென வாழ்த்துகிறேன்.

## மாணவர் அடையாள அட்டை:-

எமது கல்லூரி மாணவர்களுக்கான பாடசாலை அடையாள அட்டை, விசேட அடையாள அட்டை, தேசிய அடையாள அட்டை ஆகியவற்றைப் பெற்றுக் கொடுப்பதற்கு திரு. சி. வேலாயுதர், திருமதி. கா.சிவநேசன் திருமதி ஜெ. சுஜிதன் ஆகிய ஆசிரியர்கள் உதவிபுரிந்து வருகிறார்கள்.

## பருவச் சீட்டு:-

மாணவர்களின் போக்குவரத்து வசதி கருதி இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பருவச் சீட்டைப் பெற்றுக் கொள்வதில் திரு. சி. வேலாயுதர், திருமதி. க. விமலநாதன், திருமதி. ப. தம்பித்துரை ஆகியோர் உதவி புரிந்து வந்துள்ளனர்.

## பாடசாலை அபிவிருத்திச் சங்கம்:-

இச் சங்கமானது பாடசாலையின் அபிவிருத்தியில் பெரிதும் அக்கறை கொண்டு இயங்கிவருகின்றது. இதன் செயலாளர் சி. சிவானந்தன் அவர்கள். கல்லூரி சகல துறைகளிலும் வளர வேண்டுமென்று மிகவும் பாடுபட்டுவந்துள்ளார். இச் சங்கமானது பாடசாலையின் திருத்த வேலைகளை அவ்வப்போது செய்துவருகின்றது. க.பொ. த. சாதாரணதரப் பரீட்சையில் ஆறுக்கு மேற்பட்ட அதிவிசேட சித்தி பெற்றவர்களுக்குப் பெறுமதிவாய்ந்த பரிசில்களை வழங்கி உற்சாகப்படுத்தியது. ஆசிரியர்தினத்தைக் கொண்டாடி சகல ஆசிரியர்களுக்கும் அன்பளிப்புச் செய்ததுடன் இருபத்தைந்து ஆண்டு சேவையை முடித்துக்கொண்ட ஆசிரியர்களை விசேடமாகக் கௌரவித்தது. பரிசளிப்புவிழாவின் போது மதிய உணவை வழங்கியது. பாடசாலை முன்புறத்தில் பூங்கன்றுகளின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலியை மதிலாக அமைத்தது. இச்சங்கத்தின் நிர்வாகக் குழுவினர் நல்ல முறையில் ஒத்துழைப்புத் தந்து கல்லூரியின் வளர்ச்சிக்கு உதவிவருவது குறிப்பிடத்தக்கது. அவர்கள் பணி தொடர வேண்டுமென வாழ்த்துகிறேன்.

## பழையமாணவர் சங்கம்

பழைய மாணவியர் சங்கம் யாழ்ப்பாணக்கிளை திருமதி தி. யோகநாதனைத் தலைவராகவும், செல்வி செல்வராணி நடராசாவைச் செயலாளராகவும், செல்வி சித்திரா குமாரைப் பொருளாளராகவும் கொண்டியங்கியது. பழைய மாணவர் சங்கம் கொழும்புக்கிளை கல்லூரிக்கு கணனி ஒன்றை வழங்கியது. ஒலி பெருக்கிக் கருவியையும் வழங்கியது. கல்லூரி மாணவியரைக் கொழும்புக் கழைத்துக் கலை நிகழ்வை நடாத்தி அவர்களைக் கௌரவித்தது. கொழும்பு, கனடா, அவுஸ்ரேலியக் கிளைகள் கல்லூரி ஆலயத்தின் கும்பாபிசேகத்திற்கு நிதியுதவி வழங்கினர். இவர்களின் பணி மேலும் வளர்ந்து கல்லூரிக்குச் சேவையாற்ற வேண்டுமென வாழ்த்துகிறேன்.

## குருசேத ஆசிரியர் :- நலன்புரிச் சங்கம்

தலைவர்:- அதிபர்

செயலாளர்:- திருமதி ச. நாகராசா

பொருளாளர்:- திருமதி கோ. நகுலராசா

ஆசிரியர்களின் நலனை முன்னிட்டு மக்கள் வங்கி கன்னா திட்டிக் கிளையின் அனுசரணையுடன் ஆரம்பிக்கப்பட்ட இச் சங்கம் ஆசிரியர்களுக்கு நற்பணி ஆற்றி வருகிறது. இச் சங்கத்திற்கு வேண்டிய போது ஆலோசனை வழங்கிவரும் மக்கள் வங்கி கன்னாதிட்டிக் கிளையின் முகாமையாளர் திருமதி யோகேஸ்வரி சிவப்பிரகாசம் அவர்களுக்கு எமது நன்றி என்றும் உரித்தாகுக.

## ஆசிரியரல்லாத ஊழியர்கள்

நிரந்தர ஊழியர்களும், நிவாரண ஊழியர்களும் கல்லூரியின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு உதவி புரிந்து வருகிறார்கள். இவ்வாண்டில் ஆய்வுகூடப் பணியாளராக செல்வி எஸ். சுலோசனாவும், உதவி விடுதி மேற்பார்வையாளராக செல்வி இ. மேரிஜெசில்டாவும், நூலகப் பணியாளராக செல்வி க. ஞானகியும், சமையல் உதவியாளராக திரு. சி. ஜெயரட்ணமும் நியமனம் பெற்றுள்ளனர். இவர்களது பணிகளுக்கு நன்றியையும் பாராட்டையும் தெரிவிக்கிறேன்.

## நன்றி நவிலல்

எங்கள் அழைப்பை ஏற்று இக் கல்லூரியின் பரிசளிப்புத் தினமாகிய இந் நாளில் வருகை தந்து சிறப்பித்த யாழ். மாநகரசபை ஆணையாளர் திரு. பொ. பாலசிங்கம் அவர்களுக்கும் மாணவர்களுக்கு பரிசில்களை வழங்கிக் கௌரவித்த திருமதி பாலசிங்கம் அவர்களுக்கும் எமது இதயம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். இங்கு வருகை தந்திருக்கும் உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், அதிபர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், பழைய மாணவியர், பெற்றோர், நலன் விரும்பிகள் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

கல்லூரி நிர்வாகம் சிறப்புடன் நடைபெற எல்லா வழிகளிலும் ஒத்துழைப்பு வழங்கிய பிரதி அதிபர், செல்வி யோ. கந்தையா, வகுதித் தலைவர்கள் திருமதி பு. சோதிலிங்கம், திருமதி கா. சிவநேசன், திருமதி இ. பாலசிங்கம், திருமதி த. சிவலிங்கம், திருமதி மீ. செல்லையா ஆகியோருக்கும் மற்றும் பாட இணைப்பாளர்களுக்கும் மற்றும் அனைத்து ஆசிரியர்களுக்கும் அவர்களுடைய ஒத்துழைப்புக்கு நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்லூரியின் காலைப் பிரார்த்தனையைத் திறம்பட நடாத்த உதவுகின்ற பிரதி அதிபர், ஆசிரியர்கள் அனைவருக்கும் எனது நன்றி. கல்லூரியின் அனைத்து நிகழ்வுகளிலும் ஒத்துழைத்துச் செயற்படும் எனது மாணவக் குழந்தைகளுக்கும் எனது உளம் நிறைந்த நன்றி உரித்தாகுக. தேவைகளைக் கருத்திற் கொண்டுதவிய வலயக் கல்விப்பணிப்பாளர்கள் திரு. நா. சுந்தரலிங்கம், கலாநிதி நா. தணிகாசலம் பிள்ளை அவர்களுக்கும், பிரதிக்கல்விப் பணிப்பாளர்கள், உதவிக்கல்விப் பணிப்பாளர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், கல்விக்கோட்ட நிர்வாக உத்தியோகத்தர், அலுவலர்கள், வலய அலுவலர்கள் ஆகியோர் நல்கிய ஒத்துழைப்புக்கும் நன்றி கூறக் கடமைப் பட்டுள்ளேன்.

கல்லூரியின் எழுதுவினைஞர்கள், கல்லூரி ஊழியர்கள் உட்பட அனைவரும் ஆற்றிய பணிகளுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மீண்டும் அனைவருக்கும் நன்றி கூறி எனது அறிக்கையை நிறைவு செய்கின்றேன்.

திருமதி ச. ஜெயராசா
அதிபர்

## 1998 ஆம் ஆண்டு பரிசு பெறுவோர் விபரம்

### ஆண்டு: 6

| இல. | மாணவர் பெயர் | பாடங்கள் |
|---|---|---|
| 01. | சோபனா மகேந்திரராஜன் | தமிழ், சமயம், கணிதம், சமூகக்கல்வி, ஆங்கிலம், நடனம், சுகாதாரம், பொதுத்திறன் |
| 02. | பானுஷா சுந்தரலிங்கம் | ஆங்கிலம், தமிழ், கணிதம், பொதுத்திறன் |
| 03. | கிருபாலினி பாக்கியநாதன் | சித்திரம், விஞ்ஞானம், பொதுத்திறன் |
| 04. | கலாவதி துரைராசா | விஞ்ஞானம், பொதுத்திறன் |
| 05. | சாருகேசி கந்தசாமி | சுகாதாரம், விஞ்ஞானம், பொதுத்திறன் |
| 06. | பிருந்தாஜினி தியாகராஜா | ஆங்கிலம் சமூகக்கல்வி, பொதுத்திறன், சங்கீதம் |
| 07. | சிந்துஜா கந்தசாமி | சமயம், கணிதம், பொதுத்திறன் |
| 08. | நிருஜா ஆனந்தராசா | கணிதம், பொதுத்திறன் |
| 09. | கார்த்திகா விநாயகம்பிள்ளை | கணிதம், பொதுத்திறன் |
| 10. | இந்துஜா நாகரெத்தினம் | சமூகக்கல்வி |
| 11. | சோபனா பாலகுமார் | சங்கீதம் |
| 12. | ஜனனி இராசதுரை | சித்திரம் |
| 13. | லக்ஷா அழகரட்ணம் | நடனம் |
| 14. | சுகந்தினி சுதாகரன் | நடனம், பொதுத்திறன் |
| 15. | வாரணி விவேகானந்தன் | தமிழ், பொதுத்திறன் |
| 16. | யதுப்பிரியா கருணதாஸ் | சமூகக்கல்வி, பொதுத்திறன் |
| 17. | மீனாம்பிகை ரவீந்திரன் | சுகாதாரம், சமயம் |
| 18. | தாரணி ஸ்ரீ பாலசந்திரன் | சங்கீதம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 19. | அனித்திரா அருள்ராசன் | சித்திரம் |
| 20. | குகப்பிரியா வோகிதன் | தையல் |
| 21. | ஜனார்த்தனி கந்தசாமி | தையல் |
| 22. | சிந்துஜா கனகராஜா | தையல் |

## ஆண்டு: 7

| | | |
|---|---|---|
| 01. | நிலக்சி மகாதேவன் | தமிழ், ஆங்கிலம், விஞ்ஞானம், கணிதம், சமூகக்கல்வி, பொதுத்திறன் |
| 02. | ஜெயந்தி நவரட்ணம் | தமிழ், சமயம், பொதுத்திறன் |
| 03. | சிவசங்கரி சிவமோகன் | தமிழ் |
| 04. | ருசாந்தினி சிவாமிர்தம் | சமயம், விஞ்ஞானம், சமூகக்கல்வி, பொதுத்திறன், சுகாதாரம், ஆங்கிலம் |
| 05. | சௌமியா சித்திரவேல் | ஆங்கிலம் |
| 06. | தனுஜா மதிமுகன் | ஆங்கிலம், சமூகக்கல்வி, பொதுத்திறன் |
| 07. | துளசிகா யோகநாதன் | கணிதம், விஞ்ஞானம், வாழ்க்கைத்திறன், சமயம், பொதுத்திறன் |
| 08. | லோகவதனி சிவலிங்கம் | சுகாதரம், பொதுத்திறன் |
| 09. | டிலக்ஷா பரமசிவம் | வாழ்க்கைத்திறன், கணிதம், சித்திரம், பொதுத்திறன் |
| 10. | சுசானா பொன்னுத்துரை | வாழ்க்கைத்திறன் |
| 11. | சங்கீதா சுந்தரராஜன் | சித்திரம் |
| 12. | துஷானி ஸ்ரீகாந்தா | சித்திரம், பொதுத்திறன் |
| 13. | நர்மலா கோபாலச்சந்திரன் | சங்கீதம் |
| 14. | உஷா செல்வேந்திரன் | சங்கீதம் |
| 15. | கனேஸ்வரி சண்முகராஜா | சங்கீதம், பொதுத்திறன் |
| 16. | சிவச்செல்வி கனகசபாபதி | நடனம் |
| 17. | சரிதா கந்தசாமி | நடனம், பொதுத்திறன் |
| 18. | சுசிரேகா யோகரட்ணம் | நடனம் |
| 19. | அன்புமலர் பரம்சோதி | பொதுத்திறன் |
| 20. | கஸ்தூரி வீரசிங்கம் | பொதுத்திறன் |
| 21. | மதுராநந்தினி ஸ்ரீதரன் | பொதுத்திறன் |
| 22. | துஷந்தா யோகேஸ்வரன் | பொதுத்திறன் |
| 23. | ரேவதி ஜெயராசலிங்கம் | பொதுத்திறன் |
| 24. | தில்பா தர்பராசா | பொதுத்திறன் |
| 25. | ரூபிகா வரனீத்திரன் | பொதுத்திறன் |

## ஆண்டு 8

| | | |
|---|---|---|
| 01. | வேணுகா நகுலேஸ்வரன் | கணிதம், சமூகக்கல்வி, விஞ்ஞானம், சகிதம், சுகாதாரம், வாழ்க்கைத்திறன், பொதுத்திறன் |
| 02. | சோபிகா செல்வரத்தினம் | தமிழ், சங்கீதம், பொதுத்திறன் |
| 03. | பாரதி குணரத்தினம் | சமயம், தமிழ் |
| 04. | கீர்த்திகா இரத்தினவேல் | நடனம், பொதுத்திறன் |
| 05. | பிறேமிதா மகேந்திரராச | ஆங்கிலம், பொதுத்திறன் |
| 06. | சரிதா | வாழ்க்கைத்திறன், சித்திரம், பொதுத்திறன் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 07. | மாதங்கி நற்குணம் | விஞ்ஞானம், கணிதம், பொதுத்திறன் |
| 08. | வினோபா விக்கினேஸ்வரன் | சித்திரம் |
| 09. | கைலின் தர்மகுலசிங்கம் | சுகாதாரம் |
| 10. | சுபாசினி மதியாபரணம் | சமயம் |
| 11. | மதுலா மன்மதராசா | நடனம் |
| 12. | தர்சனா | நடனம் |
| 13. | மேகலா கனகசபாபதி | வாழ்க்கைத்திறன் |
| 14. | றயிதா சண்முகம | தமிழ், சமூகக்கல்வி, பொதுத்திறன் |
| 15. | கௌசிகா | சமயம் |
| 16. | வனஜா | ஆங்கிலம் |
| 17. | விசாலினி | சுகாதாரம் |
| 18. | தட்சாயினி | தமிழ், விஞ்ஞானம் |
| 19. | ராதிகா | சித்திரம் |
| 20. | சஞ்சீவா | சமூகக்கல்வி, கணிதம் சங்கீதம், பொதுத்திறன் |
| 21. | தர்சிகா செல்லத்துரை | பொதுத்திறன் |
| 22. | தர்சிகா | ஆங்கிலம் |

## ஆண்டு 9

| | | |
|---|---|---|
| 01. | காயத்திரி சிற்சபேசலிங்கம் | கணிதம், சமயம், ஆங்கிலம், விஞ்ஞானம் சங்கீதம், வர்த்தகம் சமூகக்கல்வியும் வரலாறு பொத்திறன் |
| 02. | வினித்திரா வேலாயுதபிள்ளை | தமிழ், விஞ்ஞானம், விவசாயம், பொதுத்திறன் |
| 03. | பிரவீனா செல்வநாயகம் | நடனம், தமிழ், வர்த்தகம், பொதுத்திறன் |
| 04. | கார்த்திகா குலசிங்கம் | சமயம், ஆங்கிலம், பொதுத்திறன் |
| 05. | சிவதர்சினி முத்துராஜா | சித்திரம், தமிழ் |
| 06. | ரோஜினி நடராசா | கணிதம், பொதுத்திறன் |
| 07. | கல்யாணி ஜெயராசா | ஆங்கிலஇலக்கியம், ஆங்கிலம், பொதுத்திறன் |
| 08. | தனுசா சுந்தரேசன் | ஆங்கில இலக்கியம் விஞ்ஞானம், பொதுத்திறன் |
| 09. | சுபா குணசிங்கம் | விவாசயம், பொதுத்திறன் |
| 10. | துளசிகாயினி சச்சிதானந்தயோகீஸ்வரன் | கணிதம், பொதுத்திறன் |
| 11. | ஜசிந்தலோஜினி சடாச்சரம் | வர்த்தகம், பொதுத்திறன் |
| 12. | துஷ்யந்தி மகாதேவன் | சமூகக்கல்வி வரலாறு |
| 13. | பாமினி சத்தியசீலன் | சமூகக்கல்வியும் வரலாறும், சமயம் |
| 14. | சிந்துஜா பாக்கியராசா | நடனம், பொதுத்திறன் |
| 15. | மதுராம்பிகை கந்தையா | பொதுத்திறன் |
| 16. | ஜனார்த்தனி பாலச்சந்திரன் | சித்திரம், விவசாயம், பொதுத்திறன் |
| 17. | துஷாரா மகாதேவன் | பொதுத்திறன் |
| 18. | சரண்யா சிவஞானசுந்தரம் | மனைப்பொருளியல் |
| 19. | நிஷாந்தினி நித்தியானந்தன் | மனைப்பொருளியல் |
| 20. | அஜந்தா ஜெயராசா | சங்கீதம், மனைப்பொருளியல் |
| 21. | சஞ்சுதா பாலச்சந்திரன் | சித்திரம் |
| 22. | சுகன்யா ஸ்ரீபதி | சங்கீதம் |
| 23. | நிரோஜினி புஸ்பதேவன் | நடனம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆண்டு 10

| | | |
|---|---|---|
| 01. | கயல்விழி பேரின்பநாயகம் | விஞ்ஞானம், சமயம், கணிதம், தமிழ், பொதுத்திறன், வர்த்தகம் |
| 02. | உஷாந்திகா சந்திரபோஸ் | தமிழ், சங்கீதம், சமூகக்கல்வி, சமயம், ஆங்கிலம், பொதுத்திறன் |
| 03. | துர்க்கா இராஜேந்திரன் | கணிதம், ஆங்கிலம், விஞ்ஞானம் ஆங்கில இலக்கியம், பொதுத்திறன் |
| 04. | திவ்வியா நடேசன் | ஆங்கில இலக்கியம், ஆங்கிலம், கணிதம், பொதுத்திறன் |
| 05. | சாமினி மனோகரன் | வர்த்தகம், விஞ்ஞானம், பொதுத்திறன் |
| 06. | கிருஷாந்தி ரமணதாஸன் | சமூகக்கல்வி, சங்கீதம், பொதுத்திறன் |
| 07. | சிவதர்சினி பாவநாசம்சிவம் | ஆங்கில இலக்கியம், பொதுத்திறன் |
| 08. | துஷ்யந்தி விஜயகுமார் | சங்கீதம், விவசாயம் |
| 09. | சரிதா விவேகானந்தராசா | விவசாயம், சமயம், பொதுத்திறன் |
| 10. | தனுஜா கிருஷ்ணதாஸன் | தமிழ் |
| 11. | சர்மிளா பொன்னுத்துரை | வர்த்தகம் |
| 12. | சிவகௌரி பேரின்பநாயகம் | நடனம் |
| 13. | தற்சுதா தெய்வேந்திரன் | நடனம் |
| 14. | சுதர்சினி இராசரத்தினம் | நடனம் |
| 15. | அஜந்தா ஜெயரட்ணசிங்கம் | சமூகக்கல்வி |
| 16. | சவிதா கனகரட்ணம் | விவசாயம் |
| 17. | வசந்தகுமாரி செல்லத்துரை | சித்திரம், பொதுத்திறன் |
| 18. | திவ்வியா தவராசசிங்கம் | சித்திரம் |
| 19. | தாரணி ஸ்ரீபதி | சித்திரம் |
| 20. | விஜயதட்சனி விக்னேஸ்வரன் | மனைப்பொருளியல் |
| 21. | அமுதினி சுந்தரலிங்கம் | மனைப்பொருளியல் |
| 22. | வபிதா கைலாசநாதன் | மனைப்பொருளியல் |
| 23. | அபிராமி மகாஞானசம்பந்தன் | நடனம் |

## ஆண்டு 11

| | | |
|---|---|---|
| 01. | யாழினி சுந்தரமூர்த்தி | தமிழ், சமயம், விஞ்ஞானம், சமூகக்கல்விவிவசாயம், பொதுத்திறன், |
| 02. | கிஷந்தி குவேந்திரநாதன் | ஆங்கிலம், தமிழ், விஞ்ஞானம், சமூகக்கல்விபொதுத்திறன் |
| 03. | தாட்சாயினி சச்சிதானந்தயோகேஸ்வரன் | ஆங்கிலம், கணிதம், நடனம் பொதுத்திறன் |
| 04. | பவித்திரா ஸ்ரீசந்திரபாலன் | கணிதம், வர்த்தகமும் கணக்கியலும் |
| 05. | கனகமனோகரி வைரவநாதன் | தமிழ் |
| 06. | கம்சானந்தி கருணாமூர்த்தி | சங்கீதம், ஆங்கிலம், சமயம் |
| 07. | தேவறஜனி ரவீந்திரன் | சமயம், சித்திரம் |
| 08. | அஜீத்தா ரவீந்திரன் | கணிதம் |
| 09. | சர்மிலா அருமைநாயகம் | விஞ்ஞானம், |
| 10. | சுலக்சனா சபாபதி | சமூகக்கல்வி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 11. | பிரியந்தி முத்துராஜா | சித்திரம் |
| 12. | கிரிசாந்தி பாக்கியநாதன் | சங்கீதம் |
| 13. | சுனித்தா பாலகுமார் | சங்கீதம் |
| 14. | சுமித்திரா யோகீஸ்வரநாதன் | சங்கீதம் |
| 15. | நிர்மலா விநாயகசிவம் | சங்கீதம் |
| 16. | தமிழினி சிவலோகநாதன் | நடனம் |
| 17. | சுகந்தினி சோமசுந்தரம் | நடனம் |
| 18. | பாலரூபினி செல்வரட்ணம் | வர்த்தகம் |
| 19. | இரட்சிகா சாம்பசிவம் | வர்த்தகம் |
| 20. | தர்மகலா சுப்பையா | மனைப்பொருளியல் |
| 21. | தர்சினி இராஜேந்திரம் | மனைப்பொருளியல் |
| 22. | பிரியந்தி ஸ்ரீதரன் | மனைப்பொருளியல் |
| 23. | கிருஷ்ணசாந்தி சுப்பிரமணியம் | விவசாயம் |
| 24. | அகல்யா தேனுகா மான்மகேந்திரன் | விவசாயம் |
| 25. | கஜந்தி இராஜகுலேந்திரன் | விவசாயம் |

## க. பொ. த. (சாதாரணம்) 1998 பரீட்சையில் நான்கிற்குக் கூடிய விசேட சித்தி பெற்றோர்,

| | | |
|---|---|---|
| 01. | கியந்தி குவேந்திரநாதன் | 7 டி |
| 02. | யாழினி சுந்தரமூர்த்தி | 7 டி |
| 03. | பவித்திரா ஸ்ரீசந்திரபாலன் | 6 டி |
| 04. | பத்மலோஜனா சண்முகலிங்கம் | 6 டி |
| 05. | தாட்சாயினி சச்சிதானந்தயோகீஸ்வரன் | 6 டி |
| 06. | வினோதா செல்வரட்ணம் | 6 டி |
| 07. | பகீரதி சண்முகரட்னம் | 5 டி |
| 08. | தமிழினி சிவலோகநாதன் | 5 டி |
| 09. | கம்சானந்தி கருணாமூர்த்தி | 5 டி |
| 10. | கார்த்தியாயினி சிவபூரனாதன் | 5 டி |
| 11. | சுகந்தி சோமசுந்தரம் | 5 டி |
| 12. | நிர்மலா வினாயகசிவம் | 5 டி |
| 13. | சர்மிலா அருமைநாயகம் | 5 டி |
| 14. | துஷ்யந்தினி யோகநாதன் | 5 டி |
| 15. | பாலரூபினி செல்வரட்ணம் | 4 டி |
| 16. | மைதிலி சிவகிருபராஜா | 4 டி |
| 17. | றாஜினி விஸ்வலிங்கம் | 4 டி |
| 18. | அகல்யா கிருஷ்ணமூர்த்தி | 4 டி |
| 19. | அகல்யாதேனுகா மகேந்திரமான் | 4 டி |
| 20. | சுரேகா யோகசிவம் | 4 டி |
| 21. | தாவணி இராஜரட்ணம் | 4 டி |
| 22. | தாரணி புஸ்பதேவன் | 4 டி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆண்டு 12 (1999) விஞ்ஞானம்

01. பிரதீபனா சிவநாதன் — பௌதீகவியல், இரசாயனவியல், தாவரவியல் விலங்கியல், பொதுத்திறன்
02. லலிதாமணி பஞ்சரட்ணம் — பௌதீகவியல், இரசாயனவியல், தாவரவியல் விலங்கியல், பொதுத்திறன்
03. தீபதர்சினி ஆரோக்கியநாதன் — விலங்கியல், தாவரவியல், பொதுத்திறன்
04. குகாஜினி தியாகராஜா — தூயகணிதம், பௌதீகவியல், பிரயோககணிதம்
05. துர்க்காதீபனா நவநீதன் — இரசாயனவியல், பொதுத்திறன்
06. தனுஷா வேலும்மயிலும் — தூயகணிதம், பிரயோககணிதம்
07. சுகந்தி நாகராசா — பிரயோககணிதம், தூயகணிதம்
08. சுதர்சனா புவனேஸ்வரன் — பொதுத்திறன்
09. வாசுகி இராசதுரை — பொதுத்திறன்

## ஆண்டு 12 (1999) வர்த்தகம்

01. அனிதா புலேந்திரராஜா — கணக்கீடு, பொதுத்திறன்
02. நிஷாந்தினி சின்னத்துரை — பொருளியல், கணக்கீடு, பொதுத்திறன்
03. சிவநிஷா கதிரவேலு — வணிகக்கல்வி, அளவையியல், பொருளியல், பொதுத்திறன்.
04. சைலஜா சிவசர்மா — வணிகப்புள்ளிவிபரவியல், பொதுத்திறன்
05. சிவசக்தி இரத்தினசபாபதி — கணக்கீடு, பொதுத்திறன்
06. தேன்மொழி பேரின்பநாதன் — வணிகக்கல்வி அளவையியல், பொதுத்திறன்,
07. ஜனனி நித்தியானந்தன் — பொருளியல்
08. மாலதி நித்தியானந்தன் — வணிகப்புள்ளிவிபரவியல், பொதுத்திறன்
09. சுதர்ஷினி விக்னேஸ்வரன் — அளவையியல், பொதுத்திறன்
10. யோகநிதி நல்லசிவம்பிள்ளை — பொதுத்திறன்
11. ஜனனி ஸ்ரீஸ்கந்தராஜா — வணிகக்கல்வி
12. தேவகி கணேசலிங்கம் — வணிகப்புள்ளிவிபரவியல், பொதுத்திறன்
13. நிரஞ்சலா வேலாயுதபிள்ளை — பொதுத்திறன்
14. வனிதா விக்னேஸ்வரமூர்த்தி — பொதுத்திறன்
15. பத்மபிரியா செல்வரட்ணம் — பொதுத்திறன்

## ஆண்டு 12 (1999) கலை

01. லிங்கா செல்வலிங்கம் — சங்கீதம், இந்துநாகரிகம், பொதுத்திறன்
02. வாசுகி கந்தசாமி — புவியியல், தமிழ், பொதுத்திறன்
03. சங்கீதா சிவகுருநாதன் — புவியியல்
04. ஜெயந்தினி கனகராஜா — புவியியல், பொதுத்திறன்
05. றஜனி சபாநாயகம் — நடனம், இந்துசமயம்
06. சிவாஜினி துரைமணி — இந்துநாகரிகம், சங்கீதம், பொதுத்திறன்
07. சியாமளா கணேசபிள்ளை — சங்கீதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 08. | தமிழ்ச்செல்வி நடராஜா | இந்துநாகரிகம், தமிழ், இந்துசமயம், பொதுத்திறன் |
| 09. | யோகதர்சினி கணபதிப்பிள்ளை | தமிழ், இந்துசமயம், பொருளியல் பொதுத்திறன் |
| 10. | கல்யாணி அருளம்பலம் | பொதுத்திறன் |
| 11. | சுரேந்தினி சண்முகசுந்தரம் | பொதுத்திறன் |

## ஆண்டு 13 (1998) விஞ்ஞானம்

| | | |
|---|---|---|
| 01. | பிரியகாந்தினி சபாபதிப்பிள்ளை | பௌதிகவியல், இரசாயனவியல், தூயகணிதம், பிரயோக கணிதம் |
| 02. | அருணா திருநாவுக்கரசு | தூயகணிதம், பிரயோககணிதம், பௌதிகவியல் |
| 03. | சாமினி திருநாநாவுக்கரசு | இரசாயனவியல், தாவரவியல் |
| 04. | தவச்செல்வி அண்ணாமலை | பௌதிகவியல் |
| 05. | மகிந்தினி சண்முகரட்ணம் | விலங்கியல், தாவரவியல், இரசாயனவியல் |
| 06. | கிருஷாந்தி சிவபாதம் | தாவரவியல், விலங்கியல் |
| 07. | மேகலா சிவராஜா | தூயகணிதம் |
| 08. | இராஜபிரதாயினி இராஜசேகரம் | பிரயோககணிதம் |
| 09. | பவானி கிட்ணபிள்ளை | விலங்கியல் |

## ஆண்டு 13 (1998) வர்த்தகம்

| | | |
|---|---|---|
| 01. | தக்ஷினி மகாலிங்கம் | கணக்கீடு, வணிகப்புள்ளி விபரவியல் பொதுத்திறன் |
| 02. | அனுஷா கணபதிப்பிள்ளை | வணிகப்புள்ளி விபரவியல், கணக்கீடு, பொருளியல், வணிகக்கல்வி, பொதுத்திறன் |
| 03. | தயாளினி தங்கராஜா | வணிகக்கல்வி, வணிகப்புள்ளி விபரவியல், பொருளியல், பொதுத்திறன் |
| 04. | கலையரசி கோபாலபிள்ளை | பொருளியல், வணிகக்கல்வி, கணக்கீடு, பொதுத்திறன் |
| 05. | நவதர்ஷனி தங்கவடிவேல் | அளவையியல், பொதுத்திறன். |

## ஆண்டு: 13 கலை (1998)

| | | |
|---|---|---|
| 01. | சன்சுலா கனகாம்பரம் | தமிழ், இந்துநாகரிகம், இந்து சமயம் |
| 02. | காயத்திரி சாந்தகுமாரன் | சங்கீதம், தமிழ், இந்துநாகரிகம், இந்துசமயம், பொதுத்திறன் |
| 03. | கீதா இராஜரட்ணம் | தமிழ், இந்துசமயம், அளவையியல், பொதுத்திறன் |
| 04. | ஜானகி சுப்பிரமணியம் | புவியியல், இந்துநாகரிகம், வலராறு, பொதுத்திறன் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

05. நந்தினி பசுபதேஸ்வரன் இந்துசமயம்
06. நிசாந்தினி ராகுலராஜ் வரலாறு
07. சோபனா சிவபாதமணி வரலாறு, பொதுத்திறன்
08. விஜித்தா இரட்ணராஜ் புவியியல்
09. பிரதீபா ஏகாம்பரநாதன் புவியியல்
10. கார்த்திகா திருஞானசம்பந்தபிள்ளை நடனம்
11. தர்சினி முத்துராஜா நடனம்
12. ஞானலக்சுமி வல்லிபுரநாதன் நடனம்
13. கஜசாந்தி இராமச்சந்திரன் சங்கீதம்
14. மஞ்சுசீத்தா சிதம்பரநாதன் சங்கீதம்
15. சுஜந்தா ஜெயரட்ணசிங்கம் பொதுத்திறன்
16. தமிழினி கணேசபிள்ளை பொதுத்திறன்
17. கோபிகா செல்வராஜன் பொதுத்திறன்
18. தமிழ்ப்பிரியா பாலச்சந்திரன் அளவையியல், பொதுத்திறன்

## பல்கலைக்கழக அநுமதி பெற்றோர் 1998 / 1999

### மருத்துவம்

01. சிவசத்தி சிவநாதன்

### விவசாயம்

01. சுகன்யா சண்முகநாதன்
02. தாரணி சுந்தரமூர்த்தி

### உயிரியல் விஞ்ஞானம்

01. பக்தகௌரி செல்வரட்ணம்
02. தாரணி சண்முகநாதன்

### பௌதிக விஞ்ஞானம்

01. சுவிதா வேலாயுதபிள்ளை

## பல்கலைக்கழக அநுமதி (1997)

### கலை

01. யசோதரா நித்தியானந்தம்
02. ஜெயகீதா பத்மலிங்கம்
03. குனாஜினி நல்லையா
04. நளாயினி பரமானந்தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

05. நேதிராஜினி யோகநாதன்
06. பிரியதர்ஜினி பேரின்பநாயகம்
07. சிவதர்ஜினி ரட்ணவேல்
08. சுகந்தி பாலசிங்கம்
09. தயாபரி சுப்பிரமணியம்
10. வத்சலா இராஜரட்ணம்
11. விருபா பரதகுமாரன்
12. யசோதினி பரஞ்சோதி
13. பிரதீபா இராஜேந்திரம்
14. கவிதாங்கனி நாகேந்திரம்
15. சுமித்திரா ஜெயலிங்கநாதன்
16. சுஜந்தா மாணிக்கதியாகநாதன்

## முகாமைத்துவம் 1

01. குகாஜினி செல்லையா
02. குனாஜினி கோபாலகிருஷ்ணன்
03. கவிதா செல்லத்துரை
04. அருந்தவச்செல்வி நாகேந்திரம்

## வர்த்தகம்

1. சுதா பாலசுப்பிரமணியம்
02. மந்தாயினி செல்வரட்ணம்
03. நிஷாந்திகா கார்த்திகேசு

## ஞாபகார்த்தப் பரிசு

| வழங்கியவர் | தொகை | ஞாபகார்த்தம் |
| --- | --- | --- |
| 1. திரு. பொ. ஐங்கரநேசன் | 5000 00 | திருமதி ப. ஜெகநாதன் கல்லூரி (முன்னாள் ஆசிரியர்) |
| 2. திரு. க. பரமானந்தராஜா | 3000 00 | |
| 3. திரு. த. கந்தசாமி | 2000 00 | திரு. ஆறுமுகம் தம்பையா |
| 4. திரு. K. சுந்தரலிங்கம் | 2000 00 | திரு. சுந்தரலிங்கம் சுதாகர் |
| 5. திரு. இ. தனபாலசிங்கம் | 2000 00 | திரு. வீரவாகு இளையதம்பி |
| 6. திரு. S. கைலாசபிள்ளை | 2000 00 | திருமதி க. செல்லம்மா |
| 7. திரு. கோ. புவனேந்திரன் | 2000 00 | தந்தை க. கோணலிங்கம் |
| 8. மணி ரியூசன் சென்ரர் | 2000 00 | |
| 9. திரு. அ. தனபாலசிங்கம் | 3000 00 | திரு. சி. ஆனந்தம் |
| 10. செல்வி புஷ்பா செல்வநாயகம் | 5000 00 | திருமதி மங்கையக்கரசி செல்வநாயகம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| வழங்கியவர் | தொகை | ஞாபகார்த்தம் |
|---|---|---|
| 11. செல்வி யோ. இராசையா | 3000 00 | திரு. வேலுப்பிள்ளை இராசையா |
| 12. திருமதி அபிராமி கைலாசப்பிள்ளை | 2000 00 | பெற்றோர் கைலாயர் சுப்பிரமணியம் பரவதவர்த்தனி சுப்பிரமணியம் |
| 13. திருமதி சிவகாமி அம்பலவாணர் | 2000 00 | தந்தை திரு. அம்பலவாணர் வைத்திலிங்கம் |
| 14. திரு. சு. பொன்னுக்கோன் | 5000 00 | திரு. சீ. சுப்பிரமணியம் |
| 15. திரு. வே. பரந்தாமன் | 6000 00 | A. S. வேலுப்பிள்ளை அன் கோ., அப்புத்தளை |
| 16. திருமதி கமலா வம்போதரன் | 5000 00 | செல்வி ப. இராமநாதன் (முன்னாள் அதிபர்) |
| 17. திருமதி தையல்நாயகி இராமநாதன் | 2500 00 | திரு. செ. இராமநாதன் |
| 18. திருமதி இராசமணியம்மா ஐயாத்துரை | 2500 00 | திருமதி இலட்சுமிப்பிள்ளை பொன்னம்மா |
| 19. திரு. திருமதி பு. சோதிலிங்கம் | 2500 00 | திரு. செல்லத்துரை, திருமதி காந்திமதி செல்லத்துரை பெற்றோர் நினைவாக |
| 20. திருமதி செல்வராசா | 2500 00 | திரு. நடராசா இந்து மகளிர் கல்லூரி (முன்னாள் லிகிதர் நினைவாக) |
| 21. திரு.திருமதி அருள்வேல் | 2500 00 | திருமதி வ. செல்வராணி (தாயார் நினைவாக) |
| 22. திரு. திருமதி நாகராஜா | 2500 00 | தந்தையார் நினைவாக |
| 23. செல்வி க. முத்துக்குமாரு | 2500 00 | தந்தையார் நினைவாக |
| 24. திரு. திருமதி சீவரத்தினம் | 2500 00 | திருநாவுக்கரசு பொன்னு (பெற்றோர்) தம்பதியர் நினைவாக |
| 25. திரு. ந. சண்முகநாதன் | 3000 00 | திருமதி ந. நல்லம்மா (தாயார்) நினைவாக |
| 26. திருமதி த. தேவராசா | 3000 00 | திரு. வேலுப்பிள்ளை நடராசா (முன்னாள் கல்விப்பணிப்பாளர்) |
| 27. திரு. ப. சிவநாதன் | 2500 00 | திரு. வேலுப்பிள்ளை பசுபதி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி
# பரிசு நிதியத்துக்கு
# அன்பளிப்புச் செய்தோர்

| வழங்கியவர் | | தொகை |
|---|---|---|
| 1. | திரு. S. குணநாதன் | 2000 00 |
| 2. | திரு. செ. யோகேஸ்வரன் | 1000 00 |
| 3. | திரு. மா. ஏகாம்பரமூர்த்தி | 1500 00 |
| 4. | திரு. S. உருத்திரசிங்கம் | 2000 00 |
| 5. | திரு. க. ஆனந்தசிவம் | 1000 00 |
| 6. | திரு. கு. சிவானந்தலிங்கம் | 1000 00 |
| 7. | திரு. பா. முத்துலட்சுமி | 1000 00 |
| 8. | திரு. ச. அருமைநாயகம் | 1000 00 |
| 9. | திரு. S. சச்சிதானந்தம் | 500 00 |
| 10. | திரு, ஆ. நாகரத்தினம் | 1000 00 |
| 11. | திரு. இ. இராமச்சந்திரன் | 1000 00 |
| 12. | திரு. பொ. இரதிகுணாளன் | 1000 00 |
| 13. | திரு. க. கணேசமூர்த்தி | 1000 00 |
| 14. | திரு. S. கற்பகநாதன் | 2000 00 |
| 15. | திரு. ம. ஆறுமுகம் | 2000 00 |
| 16. | திரு. S. கனகசிங்கம் | 3000 00 |
| 17. | திரு. S. தனபாலசிங்கம் | 2000 00 |
| 18. | திரு. I. கந்தசாமி | 1000 00 |
| 19. | திரு. K. இராசையா | 2000 00 |
| 20. | திரு. M. பாலசுப்பிரமணியம் | 1000 00 |
| 21. | திரு. ச. அருமைநாயகம் | 1000 00 |
| 22. | விநாயகர் ஸ்ரோர்ஸ் | 2000 00 |
| 23. | திரு. K. ராஜரட்ணம் | 1500 00 |
| 24. | திரு. K. முத்துலிங்கம் | 1000 00 |
| 25. | திரு. K. செல்வரெட்ணம் | 1000 00 |
| 26. | திரு. நா, சுந்தரலிங்கம் | 2000 00 |
| 27. | திரு. ச. கற்பகநாதன் | 1000 00 |
| 28. | திரு. சி. பஞ்சலிங்கம் | 1000 00 |
| 29. | திரு. T. சண்முகநாதன் | 1000 00 |
| 30. | திரு. K. ராஜரட்ணம் | 1000 00 |
| 31. | திரு. R. சண்முகலிங்கம் | 2000 00 |
| 32. | திரு. K. கந்தசாமி | 1000 00 |
| 33. | திரு. K. கணேசலிங்கம் | 1000 00 |
| 34. | திரு. R. ராமச்சந்திரன் | 1000 00 |
| 35. | திரு. S. நடேசப்பெருமாள் | 2000 00 |
| 36. | திரு. S. சதாசிவம் | 2000 00 |
| 37. | திரு. S. குணபாலசிங்கம் | 1000 00 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# கல்லூரிக் கீதம்

திருமிகு மெங்கள் யாழ்நகர்க் கணியாய்த்
திகழ்ந்திடுங் கல்லூரி எங்கள்
பெருவரு மிந்துப் பெண்களுக் கொளியாய்ப்
பிறங்கிடும் கல்லூரி — உயர்
மருவுறு கலைகள் யாவையு மின்பாய்
வழங்கிடும் கல்லூரி — உனைப்
பெருகிடும் அன்பால் புத்தியில் வைத்துன்
புகழினை வாழ்த்தோமோ — உனை
வந்தே மாதரம் வந்தே மாதரம்
என்று வணங்கோமோ. 1

இந்து மதப்புகழ் எங்கும் விளங்கிட
இசைந்திடுங் கல்லூரி இயல்
சிந்தை வளம்பெற மெய்ப் பொருளறிவைச்
சேர்த்திடுங் கல்லூரி — வளர்
செந்தமிழ் ஆங்கில வடமொழி அறிவைச்
சுரந்திடும் கல்லூரி உனை
வந்தனை செய்து பைந்தமிழ் மாலை
வாழ்த்தொடு சூடோமோ? உனை
வந்தே மாதரம் வந்தே மாதரம்
என்று வணங்கோமோ. 2

மங்கையர் மாண்பை மன்பதை அறிய
முழங்கிடும் கல்லூரி — ஒளி
பொங்குயர் அறிவுச் சுடரினை யுளத்திற்
பொறித்திடுங் கல்லூரி இந்து
நங்கையர் வாழ்வின் லட்சிய மனைத்தும்
நல்கிடுங் கல்லூரி — உனை
அங்கையில் மலர்கொண் டன்புடன் பாடி
அனுதினம் ஏத்தோமோ — உனை
வந்தே மாதரம் வந்தே மாதரம்
என்று வணங்கோமோ. 3

கலைமகள் உலவக் களிநடம் புரியக்
கண்டிடுங் கல்லூரி — என்றும்
மலைமகள் தொழுநன் மலரடி போற்றி
மாண்புறு கல்லூரி — நித்தம்
நிலமகள் நெற்றித் திலகமென்றேத்த
நிலைத்திடுங் கல்லூரி — உனைத்
தலைமுறையாகத் தொழு துளங்குளிரத்
துதி சொல்லிப் பாடோமோ — உனை
வந்தே மாதரம் வந்தே மாதரம்
என்று வணங்கோமோ. 4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org